பக்கங்கள்:07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 16 செவ்வாய்க்கிழமை 30.05.2023 கதிர்201

# ஆளும் தரப்புடன் ரணில் நேற்றுத் திடீர் சந்திப்பு

## அரசியல் நிலவரம் தொடர்பில் ஆராய்வு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஆளும் தரப்பினருக்கும் இடையில் நேற்று திடீர் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பு குறித்து பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்ததாவது:

சமகால நிலைமைகள், மற்றும் எதிர்காலத்தில் ஆட்சியை முன்னகர்த்திச் செல்வது தொடர்பிலேயே கலந்துரையாடினோம்.

அமைச்சரவை மாற்றம் குறித்தோ, அல்லது ஏனைய அரசியல் விவகாரங்கள் குறித்தோ கலந்துரையாடவில்லை.

தற்போது பொது ஜன பெரமுனவின் ஆட்சியே உள்ளது. ஆகவே அமைச்சரவை மாற்றம் குறித்து அதிகம் கரிசனை கொள்ள வேண்டியதில்லை - என்றார்.

## இது ரகசியம் அல்ல!

நாட்டைக் கெடுத்தவர்கள் அரசியல்வாதிகள் மட்டுமல்லர் அதிகாரிகளும் தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. கொழுத்துகிற அரசனுக்குக் கொள்ளி எடுத்துக் கொடுப்பவர்கள் போன்று செயற்பட்டிருக்கிறார்கள். பதிலுக்கு அந்த அரசியல்வாதிகளிடமிருந்து பதவி பட்டங்களைப் பரிசுகளாகப் பெற்றிருக்கின்றார்கள். இதன் மூலம் பொருத்தமற்றவர்கள் பொருத்தமற்ற பதவிகளில் அமர்ந்திருந்து எல்லாவற்றையும் சீரழித்தார்கள் என்பது வரலாறு மட்டுமல்ல நிகழ்காலமும்கூட.

வடக்கு மாகாணத்தில் இந்த நிலை இன்னும் மோசம். ஏனெனில் இங்கே பல அதிகாரிகள் தங்களை இனத்தின் பாது காவலர்களாக, மதத்தின் பரிபாலகர்களாக, கலாசாரத்தின் புதல்வர்களாக/புதல்விகளாகக் காட்டிக் கொள்வார்கள். ஆனால் பதவியைப் பெற இன, மத பேதமின்றி

☞2

## 5ஆவது தடவையாக சென்னை சம்பியன்

இந்தியன் பிரிமியல் லீக் (ஐபிஎல்) கிரிக்கெட் தொடரின் 14ஆவது பருவத்தில் சென்னை அணி 5 விக்கெட்டுக்களால் குஜராத் டைட்டன்ஸை வென்று சம்பியனாகியது. ஆட்டத்தின் இடையே மழை குறுக்கிட்டதை அடுத்து, சென்னை



அணியின் ஆட்டநேரமும் ஓட்ட எண்ணிக்கையும் குறைக்கப்பட்டன. ஆட்டத்தின் கடைசிப் பந்தில் 4 ஓட்டங்களை அடித்ததன் மூலம் வெற்றி இலக்கை அடைந்து திரில் வெற்றி பெற்றது சென்னை அணி.

14 பருவங்களில் 12 பருவங்கள்

☞2

## மஹியங்கனை விகாரை புனிதபூமியாக பிரகடனம்

### சன்னஸ் பத்திரம் ஜனாதிபதியால் கையளிப்பு

வரலாற்றுச் சிறப்புமிக்க மஹியங்கனை விகாரை வளாகத்தை புண்ணியஸ் தலமாக பிரகடனப்படுத்தும் ஸ்ரீ சன்னஸ் பத்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மகாவிஹார வங்சிக்க ஷ்யாமோபாலி மஹா நிகாயவின் அஸ்கிரி தரப்பின் சிரேஷ்ட சங்க உறுப்பினர், வரலாற்றுச் சிறப்புமிக்க மஹியங்கனை ரஜமஹா விகாரையின் விஹாராதிபதி மஹோபாத்யாய வண. உருலேவத்தே தம்மரக்கித்த தேரரிடம் கையளித்தார்.

மஹியங்கனை விகாரையின் புனரமைப்புப் பணிகளில் பங்கேற்ற சுதந்திர இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் நேற்று பிற்பகல் மஹியங்கனை விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, விஹாராதிபதி உருலேவத்தே தம்மசித்தி தேரரை சந்தித்து ஆசி பெற்றார்.

மெத்சவிய ஸ்தாபகர் வானியலாளர், கொழும்பு பல்கலைக்கழக பௌதீகவியல் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தலைமையில் 'மெத்சவிய மனநலக் கல்வி கருணைச் சங்கத்தின்' மூலம் வில்லுவ குளத்தின் நடுவில் நிர்மாணிக்கப்பட்ட சுமார் 102 அடி உயரமுடைய புத்தர் சிலை திறந்து வைக்கும் முகமாக நினைவுப் பலகையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திரைநீக்கம் செய்தார்.

மஹியங்கனை ரஜமஹா விகாராதிபதி மஹோபாத்யாய உருலேவத்தே தம்மரக்கித தேரர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு நன்றியுணர்வாக நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி வைத்தார்.

இப்புனித நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய மஹியங்கனை ரஜமஹா விகாராதிபதி, வரலாற்றுச் சிறப்புமிக்க மஹியங்கனை புனிதபூமியின் புனரமைப்புப் பணிகளில் இணைந்து கொண்ட ஒரே ஒரு நிறைவேற்று அதிகாரம்

☞2

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து எண்ணெய்க் கசிவு ஏற்படவில்லை

### கடல்சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை அறிவிப்பு

இலங்கைக் கடற்பரப்பில் விபத்திற்குள்ளான எக்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து எந்தவிதமான இரசாயனங்களோ அல்லது எண்ணெய் கசிவோ ஏற்படவில்லை என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை அதிகார சபையின் பொது முகாமையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை கடற்படையினருடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது எண்ணெய் அல்லது இரசாயன கசிவு ஏற்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கவில்லையென இலங்கை கடற்படையினரால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கடற்பரப்பை மேலும் அவதானிப்பதற்காகவும் கடற்பரப்பிலிருந்து மாதிரிகளை பெறுவதற்காகவும் எமது அதிகார சபையின் விசேட குழுவொன்று கடற்பரப்பிற்கு சென்றுள்ளது - என்று கூறப்பட்டுள்ளது.

## வற்றாப்பளை பொங்கலுக்காக தண்ணீரில் விளக்கெரிக்க கடல் தீர்த்தம் நேற்று எடுப்பு

### பக்திச் சடங்கு ரீதியாக நிகழ்வுகள் சிறப்புற்றன

(சண்முகம் தவசீலன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் கடல் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வுடன் நேற்றுத் தொடங்கியது.

முள்ளியவளை

☞2



## 11 அரச நிறுவனங்களை விற்பது குறித்து ஆராய்வு

11அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது தொடர்பாக அமைச்சரவை ஆராய்ந்துள்ளது.

ஸ்ரீலங்கா டெலிக்கொம், ஸ்ரீலங்கா விமான கூட்டுத்தாபனம், அரச வணிக்கக் கூட்டுத்தாபனம், உள்ளிட்ட 11 நிறுவனங்களை தனியார் மயப்படுத்தப்படுத்தவது தொடர்பாக ஆராய்ந்துள்ளதாக அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதா இல்லையா என்பது தொடர்பில் அமைச்சர்கள் உறுதிப் படுத்திய தகவல்களை வெளியிடவில்லை.

அவர்கள், அமைச்சரவை கூட்டத்தின் போது மேற்படி நிறுவனங்கள் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டதாக மட்டுமே உறுதிப்படுத்தியுள்ளனர்.

## இராஜாங்க அமைச்சர் விடுவித்த சீனர் அவர் நாட்டில் தேடப்படும் குற்றவாளி

### அம்பலப்படுத்தினார் சட்டமா அதிபர்

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி நாட்டிற்குள் நுழைந்து இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண் டோவின் எழுத்துமூல கோரிக்கையின் பிரகாரம் விடுவிக்கப்பட்டதன் பின்னர் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட சீனக் குடிமகன், சீனாவில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரெனத் தெரியவந்துள்ளது.

சட்ட மா அதிபரினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அறிவித்தலினூடாக இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மே 18 துபாயிலிருந்து வருகை தந்திருந்த குறித்த சீனர், கினிநாட்டு கடவுச்சீட்டை வைத்திருந்தார். அவர் இலங்கைக்குள் நுழைய முயற்சித்தபோது, அது போலி கடவுச்சீட்டு என உறுதியானது. அவரை நாடுகடத்துவதற்காக பின்னர் குடிவரவு மற்றும் குடியகல்வு

☞2

## ஆறுமுகன் தொண்டமான் நினைவாக முத்திரையும் கடிதயுறையும் வெளியீடு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமானின் நினைவாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் விசேட நினைவு முத்திரை மற்றும் கடித உறை என்பன நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வெளியிடப்பட்டன.

வெகுசன ஊடகம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவினால் நினைவு முத்திரையும் கடித உறையும் ஜனாதிபதிக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் மற்றும் ஆறுமுகன் தொண்டமானின் மனைவி ராஜலட்சுமி தொண்டமான் ஆகியோருக்கு நினைவு முத்திரையும் கடித உறையும் வழங்கப்பட்டது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட

☞2

## கிளிநொச்சி விபத்தில் நேற்று 4 பிள்ளைகளின் தந்தை சாவு

கிளிநொச்சியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

கிளிநொச்சியில் இருந்து தருமபுரம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் புது குடியிருப்பு பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த கப்ரக (பட்டா) வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயம் அடைந்தனர். இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி அவர்களில் ஒருவர் உயிரிழந்தார்.

தருமபுரத்தைச் சேர்ந்த தியாகராசா சஞ்சீவன் (வயது 36) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிழந்தார். மது போதையில் வாகனம் செலுத்தியதே விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (133)

## மத வெறுப்பைக் கக்கி வரும் தேரர்களை நோக்கியும் சட்டம் இனிப் பாய வேண்டும்

### மனோ எம்.பி. வலியுறுத்து

'போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் சமூக பேச்சாளர் நதாஷா எதிரிசிங்க ஆகியோருக்கு எதிராக அரசின் சட்டம், ஒழுங்கு விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டம் ஒழுங்கு, நீதித்துறை தன் கடமையைச் செய்யட்டும். அதேவேளை இந்நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளைத் தொடர்ந்து இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதங்களுக்கு எதிராகப் பேசி வரும் பௌத்த பிக்குகளை நோக்கியும் இதே சட்டம் ஒழுங்கு, நீதித்துறை பாய வேண்டும். எந்தவொரு மதத் தலைவரும், செயற்பாட்டாளரும், தமது இனவாத, மதவாத நடவடிக்கைள் தொடர்பில் இனிமேல் சட்டத்தின் முன் விலக்குப் பெறக்கூடாது.'



இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற

☞2

## மாணவர்கள் நலன் கருதிச் செயற்படுங்கள் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவுறுத்து

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கினார்

தாம் கல்வி கற்ற அன்றாட சூழலுக்கு மாற்றமான பரிச்சயமற்ற சூழலில் பரீட்சைக்கு முகம் கொடுப்பது மாணவர்களின் மன அமைதிக்கு தடையாக இருப்பதாகவும், எப்போதும் கல்வி அமைச்சும் பரீட்சை திணைக்களமும் தமது வசதிக்காக அன்றி மாணவர்களின் வசதி மற்றும் நலன் கருதி செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

கல்வி அமைச்சின் செயலாளர், பரீட்சைகள் ஆணையாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்படி

☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த அரசியல்வாதிகளை நாடுவதற்கும் அவர்கள் தயங்கியதில்லை. அப் படி நாடாதவர்களை எங்காவது ஓரமாக ஒதுக்கி வைத்து விட்டு - அவர்கள் எவ்வளவு திறமையாளர்களாக இருந்தாலும் சரி - பொருத்த மற்றவர்கள் பதவிக் கதிரைகளை அலங்கரித்து ஊரைக் கெடுத்துவிடுவார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், பதவியைப் பெற்றுத் தந்தமைக்காக அந்த அரசியல்வாதி சொல்வதையெல்லாம் செய்வதற்கு அதிகாரிகள் கூச்சப்பட்டதே கிடையாது. அப்படிச் செய்து பழிப் பெயர் கேட்ட பல அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனாலும் இப்போதும் அந்த நடைமுறையில் மாற்றம் ஏதுமில்லை.

முல்லைத்தீவில்மாவட்டச் செயலாளருக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. பதிலாளராக ஒருவர்நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால், நிரந்தர நியமனத்திற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் தனது பரிந்துரையாக முன்வைத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் செயலாளராகப் பதவி வகிக்கும் ஒருவரை முல்லைத்தீவு மாவட்டச் செயலராகக நியமிக்குமாறு அவர் தனது பரிந்துரையை ஜனாதிபதி மற்றும்உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சர் ஆகிய இருவரிடம் முன்வைத்துள்ளார்.

கோரிக்கைக்கடிதம்கடந்த வாரமேஅனுப்பப்பட்டுவிட்டது. ஆனாலும் இன்னும் அந்தப் பரிந்துரைக்குப் பதில் கிடைக்கவில்லை. மாவட்ட அரச அதிபர் நியமனம் என்பது அமைச்சரவை அங்கீகாரத்துடன் இடம்பெறும் ஓர் நியமனம். இந்தவார அமைச்சரவைக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நியமனம் தொடர்பில் ஏதும் ஆராயப்படவில்லை. ஆனால் பதில் அரச அதிபராக கனகேஸ்வரனை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பரிந்துரைக்கப்பட்டவரும் பரிந்துரைத்தவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களல்லர். அப்படி இருப்பது இன நல்லிணக்கத்துக்குச் சிறப்பான ஒன்றுதான். ஒரு வேளை அந்தப் பரிந்துரைப் படி நியமனம் வழங்கப் பட்டுவிட்டால், பதவியைப் பெற்றுத்தந்தேன்என்பதற்காக தனக்கு வேண்டியதை எல்லாம், குறிப்பாகபுத்தளத்தில் இருப்பவர்கள்எல்லோருக்கும் வடக்கில் காணி கொடு என்று அந்தஇராஜாங்கஅமைச்சரும் நிர்ப்பந்திக்கக்கூடாது. அதைக் கேட்டுக்கொண்டு பதவி பெற்றவரும் செயற்படுத்தக்கூடாது.

இப்படித்தான் நாம் நினைக்கிறோம். ஆனால்பதவி படுத்தும் பாடு பெரும்பாடு. அது என்னென்ன செய்யும் என்பதைஇருந்துபார்ப்போம்1

**இடிமின்னல்**

## 5ஆவது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளையாடிய (2 ஆண்டுகள் தடை) சென்னை அணி, 10ஆவது தடவையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது. ஞாயிற்றுக்கிழமை நடக்க வேண்டிய ஆட்டம் மழை காரணமாக திங்கட்கிழமை இரவுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி களத் தடுப்பைத் தேர்ந்தெடுத்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 பந்துப் பரிமாற்ற முடிவில் 214 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணியில் இடம்பிடித்துள்ள தமிழ்நாடு வீரரான சாய் சுதர்சன் மிகச் சிறப்பாக ஆடி 94 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். மற்றொருவீரரானவர்த்தமான் சாகாஅதிரடியாக54ஓட்டங்கள் குவித்தார்.

குஜராத் வீரர்கள் சென்னைப் பந்து வீச்சாளர்களின் பந்துகளை மைதானத்தின் நாலா பக்கமும் சுழற்றி வானவேடிக்கை காட்டினர்.

பதிலுக்கு களமிறங்கிய சென்னைஅணி, மூன்றாவது பந்தில் தனது முதல் நான்கு ஓட்டங்களைப் பெற்றபோது மழைகுறுக்கிட்டுஆட்டத்தைக் குழப்பியது. மீண்டும் ஆட்டம் தொடங்கியபோது, டக்வோர்த் லூயிஸ்முறையில்சென்னை அணிக்கு 15 ஓவர்களில் 171 ஓட்டங்கள் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

சென்னை அணியில் எந்தவொரு தனி வீரரும் மிகப் பெரும் ஓட்டங்களைக் குவிக்கவில்லை. டெவன் கான்வேமட்டும்48ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழந்தார். சிவம் டுபே கடைசி வரை ஆட்டமிழக்காமல் நின்று 32 ஓட்டங்கள் அடித்தார். கடைசிப்பந்தில்சென்னையின் வெற்றிக்கு 4 ஓட்டங்கள் தேவையாக இருந்தது. ரவீந்திர ஜடேஜா அந்த 4 ஓட்டங்களைஅடித்துஅணிக்கு வெற்றியைத் தேடித் தந்தார். கொன்வே ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இந்த வெற்றி மூலம் ஐ.பி.எல். தொடரில் 5ஆவது தடவையாகவும்கிண்ணத்தை வென்றுமும்பைஇந்தியன்ஸ் அணியின் வெற்றிச் சாதனையைச்சமன்செய்தது சென்னை.

அகமதாபாத்தில் உள்ள நரேந்திரமோடிமைதானத்தில் நடந்த இந்தப் போட்டியை 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் நேரடியாகக் கண்டுகளித்தனர்.

## தண்ணீரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டா விநாயகர் கோயிலில் இருந்து தீர்த்தக்குடம் முல்லைத்தீவு பெருங்கடலை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டு தீர்த்தம்எடுக்கப்பட்டுதீர்த்தம் எடுப்பதற்கு முன்பாகக் காட்டா விநாயகர்ஆலயத்திலேசிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்துஅங்குள்ளஅம்மன் சந்நிதியிலும் வழிபாடுகள் நடத்தப்பட்டன. அங்கிருந்து தீர்த்தக்குடம் முல்லைத்தீவு

தீத்தக்கரை கடற்கரை நோக்கிக் கொண்டு செல்லப் பட்டு அங்கு தீர்த்தம் எடுக்கப்பட்டதுஎடுக்கப்பட்டதீர்த்தம் நேற்றிரவு காட்டா விநாயகர் ஆலயத்தை வந்தடைந்தது. அங்கு மடைபரவி இன்று அதிகாலை வேளையில் அங்கே எடுத்துவரப்பட்ட தீர்த்த நீரில் விளக்குக் கொழுத் தப்படும். தொடர்ந்து

காட்டாவிநாயகர்ஆலயத்தில் தொடர்ச்சியாக மடைபரவி பூசைகள் இடம்பெறும்.

ஜூன் 4 காட்டா விநாயகர் ஆலய பொங்கல் நிகழ்வும் மறுநாள்ஜூன்5வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவமும் மிகச் சிறப்பாக இடம் பெறவுள்ளன.

## இராஜாங்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தினர் தடுத்து வைத்திருந்தபோது, இராஜாங்க அமைச்சர் அருந்திக்க தலையிட்டு அவரை விடுவித்திருந்தார்.

மே 19 இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தலையீடு செய்து குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு கடிதமொன்றை அனுப்பி, குறித்த சீனர் தமது அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படவுள்ளவீடமைப்புத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாட்டிற்கு வந்துள்ளார் என்று தெரிவித்தார்.

அவரிடமுள்ள சீனக் கடவுச்சீட்டை கவனத்திற்கொண்டுஅவரைநாட்டிற்குள் அனுமதிக்கஇடமளிக்குமாறும் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைய விடுவிக்கப்பட்டார். ஆனால்இதுகுறித்த செய்தி வெளியானதைத் தொடர்ந்து இது பெரும் சர்ச்சையாகியது. அந்தச் சீனர் மீண்டும் மே 22 குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் தம்மை மீண்டும் சீனாவிற்கு அனுப்புவதை தடுத்து உத்தரவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சீனரால் எழுத்தாணை (ரீட்) மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்றன.

இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக்க பண்டார, குறித்த நபர் சீனர் அவரது நாட்டு அரசால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரென மன்றுக்கு அறிவித்தார்.

இதனிடையே, குறித்த மனுவை மீளப்பெறுவதாக சீனர் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி தெரிவித்தார்.

குறித்தசீனர்தமதுநாட்டில் தேடப்படும் குற்றவாளியென சீனத் தூதரகம் அறிவித்துள்ளதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடிய பின்னர் குறித்த சீனரை விரைவில் நாட்டை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

## ஆறுமுகன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், கிழக்கு



மாகாணஆளுநரும்இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், அமைச்சர்களானநிமல்சிரிபாலடிசில்வா ,கெஹெலிய ரம்புக்வெல்ல, டக்ளஸ் தேவானந்தா, மஹிந்த அமரவீர, நஸீர் அஹமட், மனுஷ நாணயக்கார,நாடாளுமன்றஉறுப்பினர்களான வஜிர அபேவர்தன, மஹிந்தானந்த அலுத்கமகே, சீ.பி ரத்னாயக்க, தபால் மா அதிபர் எஸ். ஆர்.டபிள்யூ. எம்.ஆர்.பி.சத்குமார மற்றும் ஆறுமுகன் தொண்டமானின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## சமூக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கமாத்திரமேஎன்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,இரண்டுமன்னர்கள் மஹியங்கனைவிகாரையின் புனரமைப்புப் பணிகளில் தலைமையேற்று செயற்பட்டனர். அது துட்டகைமுனு மன்னன் மற்றும் முதலாம் விஜயபாகுமன்னன். பின்னர் டி.எஸ்.சேனநாயக்கபிரதமராக இருந்த காலத்தில் அதன் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நாட்டை எட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் ஆட்சி செய்த போதிலும், மஹியங்கனை புனிதஸ்தல புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வருகை தந்த ஒரே ஒரு நிறைவேற்று ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க மாத்திரமே.

மஹியங்கனை விகாரை வளாகத்தை புண்ணியஸ்தலமாக பிரகடனப்படுத்தும் வர்த்தமானியை வெளியிட்டவர் நீங்கள்தான். இதுவரை, மஹியங்கனை விகாரை தொடர்பில் புனித நகர வர்த்தமானி மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தது -என்றார்.

## மத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்மனோகணேசன் தெரிவித்தார்.

"பாஸ்டர் ஜெரோம், முற்போக்குப் பேச்சாளர் நதாஷா ஆகியோரைச் சுற்றி வளைத்திருக்கும் பொலிஸ், நீதிமன்ற சட்டங்கள், இந்நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளைத் தொடர்ந்து பேசி வரும் பௌத்த பிக்குமார்களுக்கு எதிராகவும் பயன்பட வேண்டும். இனிமேல் இந்நாட்டில் சட்டம் ஒருபக்கச் சார்பாக இருக்க முடியாது.' - என்றார் அவர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் ருவிட்டர்தளங்களுக்கும்,தமது டுவிட்டர் செய்தியை மனோ கணேசன் இணைத்துள்ளார். (02)

## மாணவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தல்களை வழங்கினார்.

குறைந்தது 75 மாணவர்களாவது பரீட்சைக்குத் தோற்றத்தகுதிபெற்றிருந்தால், அந்தப் பாடசாலையை பரீட்சைநிலையமாக்குவதற்கு நடவடிக்கைஎடுக்குமாறுகல்வி அதிகாரிகளுக்குஆலோசனை வழங்கினார்.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள பரீட்சை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாதவகையில்ஏதேனும் வசதிகளை வழங்க முடியுமாயின், அதற்காக அடுத்த சில நாட்களில், நடவடிக்கை எடுக்குமாறும்அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நேற்று ஆரம்பமான 2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு 3,568 நிலையங்களில் 472,553மாணவர்கள்தோற்றுகின்றனர். அதற் காகப் சுமார் 40,000 அரச அலுவலர்கள் பணிய மர்த்தப்பட்டனர்.

ஆனால், இம்முறை பல பாடசாலைகளின் மாணவர்களைத் தாம் கல்வி கற்கும் பாடசாலைக்குப் பதிலாக, வேறுபாடசாலையில்அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததால் மாணவர்கள் சிரமங்களைஎதிர்கொள்வதாக பெற்றோர்களும் மாணவர்களும் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஆராய்ந்ததில் தற்போது நிலவும் பொருளாதாரநிலைமையைக் கருத்திற்கொண்டு பரீட்சை நிலையங்களைமட்டுப்படுத்த கல்வி அமைச்சும் பரீட்சை திணைக்களமும் தீர்மானித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது, மாணவர்களின் மன நிலையை நேரடியாகப் பாதிக்கும் என்பதால், இவ்வாறான வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர் குறைந்தது ஒரு வருடமாவது உரிய பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கு அறிவித்த பின்னரே இதனை நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எவ்வாறாயினும், மாணவர்களின் கல்விக்காக நடத்தப்படும் அனைத்து பரீட்சைகளையும் தாமதமின்றி நடத்துவதற்கு முறையான வேலைத்திட்டம் அவசியமானது எனவும், அவைநடத்தப்படாமைக்கான காரணங்களை கூறிக் கொண்டிருப்பது பரீட்சை திணைக்களத்தின்பணியல்ல எனவும்குறிப்பிட்ட ஜனாதிபதி, மாணவர்கள் பழகிய சூழலில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான பின்னணியை உருவாக்குவது கல்வி அமைச்சு மற்றும் பரீட்சை திணைக்களத்தின் முக்கிய பொறுப்பு என்றும் தெரிவித்தார்.










காலைக்கதிர் Kalaikkathir

# கோடி கோடியாய் சம்பாதிக்கும் ஆலயங்கள் இந்து மக்கள் வறுமையை போக்கமுடியாதா?

## காரைதீவில் மேலதிக அரச அதிபர் ஜெகதீசன்கேள்வி

(வி.ரி. சகாதேவராஜா)

வறுமையை காரணம் காட்டி இந்து மக்கள் மதம் மாற்றப் படுகின்றார்கள் என்று கூக்குரலிடுகின்றோம். ஏன் இந்து தனவந்தர்களால், இந்து அமைப்புகளால் இந்துமக்களின் வறுமையை துன்பத்தை போக்குவதற்குமுடியாதா? கோடிகோடியாய் நிவர்த்திசெய்யமுடியாது? அதுபோல கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் பெரிய பெரிய ஆலயங்கள் இந்த இந்து மக்களின் வறுமையை அல்லது துயரை ஏன் துடைக்க முடியாது? அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்றஅதேபோல்மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற பெரிய ஆலயங்கள் சேர்ந்தாலே இந்து பக்கம் நியாயமும் இருக்கின்றது.

எனவே அந்த கேள்விக்குரிய விடை எம்மிடம் தான் உள்ளது என்பதை மறந்து விட முடியாது. இங்கு அமெரிக்காவில் வாழ்கின்ற இந்து அன்பர்கள் அளித்த அன்பளிப்பு இந்த மக்களுக்கு வழங்கப்படுகின்றது. அதையிட்டு அவர்களுக்குநன்றிகூறுகின்றோம்



சம்பாதிக்கின்ற ஆலயங்களுக்கு இது முடியாதா?

- இவ்வாறு, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம்ஜெகதீசன்காரைதீவில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய போது கேள்வி எழுப்பினார்.

இந்து ஸ்வயம் சேவக



சங்கத்தின் அம்பாறை மாவட்ட கிளை, மாவட்டத்தில் உள்ள 360 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு தலா 25 கிலோ கோதுமை மற்றும் 25 கிலோ அரிசி என்பவற்றை வழங்கி வைக்கும் நிகழ்வு காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இந்து ஸ்வயம் சேவக சங்க அம்பாறை மாவட்ட தலைவர் இரா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் மேலும் தெரிவிக்கையில் -

இந்துமக்களின்வறுமையைப் பயன்படுத்தி மாற்று மதத்தினர் உதவியைசெய்துமதம்மாற்றிவருகின்றனர். இதனை தொடர்ச்சியாக காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைமையை ஏன் இந்து அமைப்புகளால் இணைந்து மக்களின் வறுமையை நிச்சயம் போக்க முடியும்.

இறைவன் நேரடியாக வந்து மக்களின் பிரச்சினைகளை - தேவைகளை - ஒருபோதும் தீர்த்து வைப்பதில்லை. மாறாக, சில மனிதர்களூடாக அமைப்புகளூடாக நம்மை போன்றவர்களைக் கருவியாகபயன்படுத்தியேமக்களின் பிரச்சினைகளை - தேவைகளை - தீர்த்து

வைக்கின்றார்.

எனவே அந்த அமைப்பினர் மனிதாபிமானத்துடன் செயற்பட்டு இந்து மக்களின்வறுமையை போக்க முன்வர வேண்டும் என்று கூறி வருகின்றோம். ஆனால் அது அவர்களது காதுகளில் ஏறுவதாக இல்லை.

நாங்களும் ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லிக் கொண்டிருக்கின்றோம் ஆலயங்கள்தங்கள் திருவிழாக்கள் என்றால் மக்களிடம் கையேந்துகிறார்கள். அதே மக்கள் அனர்த்தத்தில் அல்லது நாட்டு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றபொழுதுஅந்தமக்களுக்கு பெரிதாக உதவுவது இல்லை. இதுபோன்ற காரணங்களால்





அவர்கள் மதம் மாறுவதில் ஒரு .ஆனால் இதையிட்டு சந்தோசம் அடையமுடியாது .ஏனென்றால் இங்குள்ள இந்து தனவந்தர்கள் அமைப்புக்கள் ஆலயங்கள் இந்த விடயத்தை கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த மத மாற்றங்களைத் தவிர்க்கலாம் தடுக்கலாம். இங்கேஇந்துசேவகசங்க அம்பாறைமாவட்டகிளைபாரியதொரு பணியை செய்து வருவதையிட்டு சந்தோசமடைகின்றேன். மேலதிக அரசாங்க அதிபர் என்ற வகையில் காரைதீவிலிருந்து ஏனைய தமிழ் கிராமங்களில் இருந்து

புலம்பெயர்ந்துவெளிநாடுகளில் வாழ்கின்ற இந்து அன்பர்கள் இங்கு கஷ்டப்பட்டு வாழ்கின்ற இந்து மக்களுக்கு உதவுவதற்கு நீங்கள் நேசக்கரம் நீட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். - என்றார்.

முதற்கட்டமாக சம்மாந்துறை காரைதீவு பிரதேசங்களைச்சேர்ந்த 169 விதவைத் தாய்மார்களுக்கு இந் நிவாரணம் முறைப்படி வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேசத்திலுள்ள முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் சிறிகாந்தன் நன்றியுரையாற்றினார். (05)

# குருக்கள்மாரும் ஆர்வம் செலுத்திய நற்பிட்டிமுனை இரத்ததான முகாம்!

## வெயாங்கொடவில் சம்பவம்

(வி.ரி. சகாதேவராஜா)

நற்பிட்டிமுனை இந்து இளைஞர் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிவசக்தி மகாவித்யாலயத்தில்நடைபெற்றது.

குருதி வழங்குவதில் ஆலய குருக்கள்மாரும் ஆர்வம் செலுத்தினர்.

கல்முனை ஆதார வைத்திய சாலையின் உதவியோடு "உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" என்ற திட்டத்தின் கீழ் இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 4 மணி வரை இந்த முகாம் இடம்பெற்றது என்றும் 63 பேர் உதிரம் வழங்கினர் என்றும் இந்து இளைஞர் மன்ற பிரமுகர் பியந்த தெரிவித்தார். (05)

# "இலக்கிய வாதிகள் அனைவரும் சமூகப் போராளிகளே" "நிலவின் கர்ப்பங்கள்" நூல் வெளியீட்டில் அரச அதிபர்!

(வி.ரி. சகாதேவராஜா)

இலக்கியவாதிகள் ஒரு வகையில் சமூக போராளிகளே. சமூக அவலங்களை சுட்டிக்காட்டும் காலக் கண்ணாடி அவர்கள்.

- இவ்வாறு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன்காரைதீவில் நடைபெற்ற ''நிலவின் கர்ப்பங்கள்'' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.



காரைதீவின் இளங்கவிஞர் விபுலசசி எழுதிய ''நிலவின் கர்ப்பங்கள்"கன்னி கவிதைநூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை மாலை 3 மணியளவில் காரைதீவில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கூட்டுறவுத்



துறை ஆணையாளரும் கிழக்கு மேலதிக மாகாண கல்வி பணிப்பாளருமான எந்திரி நடராஜா சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொருளாதாரநெருக்கடிமிகுந்த இந்தக் காலகட்டத்தில் கவிஞர் விபுலசசி, தனதுதந்தைதமிழாசான் அமரர் நல்லதம்பி மனோகரனின் 24 ஆவது வருட ஞாபகார்த்தமாக இந்த கவிதை நூல் தொகுதியை வெளியிடுவதுசாதாரணமானதல்ல. 140 பக்கத்தில் 96 கவிதைகளை அழகாகக் கோர்த்து அடுக்கி உள்ளார் .கவிஞர் விபுலசசி மனித அவலங்களை மனிதத்துவத்தை சிறப்பாக சொல்லுகின்றார். இந்தக் கவிதைநூல்சாகித்திய பரிசுபெறும் என்பதில்ஐயமில்லை. காரைதீவின் மைந்தன் சசிப்பிரியன் ஈழத்து இலக்கிய உலகில் நிச்சயமாக பிரகாசிப்பார். அவர் மேலும் பல நூல்களைப்படைக்க வேண்டும். - என்றார்.

முதல் பிரதியை மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி நூலாசிரியர் மனோகரன் சசிப் பிரியனிடமிருந்து பெற்றுக் கொண்டார். ஏனைய அதிதிகளுக்கும்





கலந்து கொண்டவரகளுக்கும் பிரதிகள் வழங்கப்பட்டன. எழுத்தாளரும் உதவி கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா நிகழ்ச்சிகளை நெறியாள்கை செய்தார். நூல் நயவுரைகளை வெல்லாவெளி உதவி பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனன், கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் துறை திணைக்கள பிரதிப் பணிப்பாளர் இராகி, இளங்குமுதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூல் வெளியீட்டு உரையை சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையின் பொது சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி நடேசன் அகிலன் நிகழ்த்தினார். வாழ்த்துரைகளை கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பபீட பீடாதிபதி கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் மற்றும் கவிஞர் வில்லுபாரதி முரளிதரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலாசிரியரின் உறவினரானஓய்வுநிலைஅதிபர்க.புண்ணியநேசன் நன்றியுரையாற்றினார்.

கல்முனைஅஷ்ரப்ஞாபகார்த்த ஆதாரவைத்தியசாலையின்தாதிய உத்தியோகத்தரான மனோகரன் சசிப்பிரியனின் கன்னி கவிதை நூல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (05)

# அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் புதிய நிர்வாகம் தெரிவு



(ஏயெஸ்மௌலானா)

அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையின் நடப்பாண்டுக்கான நிர்வாகத் தெரிவுக் கூட்டம் அதன் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா மதனி தலைமையில் கடந்தஞாயிற்றுக்கிழமை மாலை சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது சபையின் புதிய தலைவராக அஷ்ஷெய்க் ஐ.எல்.எம். ஹாஷிம் அஷ்ஹூரி தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக மீண்டும் அஷ்ஷெய்க் ஏ.எல். நாசிர்கனி ஹாமி தெரிவானதுடன் பொருளாளராக அஷ்ஷெய்க் இஸட். எம்.நதீர், உப தலைவர்களாக அஷ்ஷெய்க்எம்.ஐ.ஜஹ்பர்பலாஹி, அஷ்ஷெய்க் அன்சார் மௌலானா நழீமி, உப செயலாளராக

அஷ்ஷெய்க் எம். எல்.பைஷல் காஷிபி ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுடன் 21 உலமாக்களைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் சுமார் 25 வருட காலம் அம்பாறைமாவட்டஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவராக பணியாற்றி வந்த அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா மதனி இதன்போது ஓய்வு பெறுவதாக அறிவித்து பிரியாவிடை பெற்றுக் கொண்டார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மையில் என்ன நடக்கின்றது?

கடந்த சில வாரங்களாக பௌத்த மத நிந்தனை தொடர்பான செய்திகளும் அது தொடர்பாகச் சிலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படும் செய்திகளும்அதிகம்பேசுபொருளாகி இருக்கின்றன. இந்தச்செய்திகள்அனைத்தும்ஆளும்தரப்பினரால் வேண்டுமென்றே உருவாக்கப்படுகின்றன, மக்களின் கவனத்தை நாட்டின் முக்கிய பிரச்சினைகளில் இருந்து திருப்புவதற்காக இதனைச் செய்கிறார்கள் என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

பௌத்தத்தை நிந்தித்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் போதகர் ஜெரோம், நகைச்சுவைக் கலைஞர் நடேஷா எதிரிசிங்க, சாந்தனதேரர்எல்லோருமேஇதற்குமுன்னர்ஆளும் தரப்புடன் நெருக்கமானவர்களாக இருந்ததற்கான தொடர்புகளை இதற்கான ஆதாரமாக எதிர்க் கட்சிகள் முன்வைக்கின்றன.

அதேநேரத்தில் மகியங்கனை விகாரையைச் சீரமைப்பதில் பங்கேற்ற முதல் அரசுத் தலைவர் என்று ரணில் புகழப்படுகின்றார். ஒருபுறத்தில் பௌத்தத்தை நிந்திப்பவர்களைக் கைது செய்தல், சிறையில் அடைத்தல் என்பன நடக்கும் அதேதருணத்தில் மறுபுறத்தில் பௌத்தைக் காத்த மன்னர்களான துட்டகைமுனு மற்றும் மகா பராக்கிரமபாகு மன்னர்கள் வரிசையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகுடம் சூட்டப்படுகின்றது என்பவற்றையெல்லாம் பார்க்கும்போது, எதிர்க் கட்சிகள் கூறுவதிலும் உண்மை இருபதைப் போல தோன்றுவதைத் தவிர்க்க முடியவில்லை.

சமகாலத்தில் நன்றாக இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய அரச நிறுவனங்களைத் தனியாருக்கு விற்கும்முன்முயற்சிகள்எடுக்கப்படுகின்றன.டொலரின் விலை இறங்குகின்றது என்று காட்டப்பட்டாலும், வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தும் இயலுமைக்கு நாடு இன்னும் திரும்பவில்லை. பங்களாதேஷுக்கும் இந்தியாவுக்கும் அவசரமாக, கைமாற்றாக வாங்கிய கடன்களைக்கூடத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. பொருளாதார மீட்சிக்கு வேண்டிய உள்ளூர் உற்பத்தித் துறையை மேம்படுத்துவதற்கான பெருமெடுப்புத் திட்டம் எதவும் இதுவரையில் முன்னிறுத்தப்படவில்லை. விவசாயத்தை நவீனமயப்படுத்துவதாக அரசுத் தலைவர் திரும்பத் திரும்பக் கூறினாலும் அது என்ன என்பது தெளிவாகவும் இல்லை, அதற்கான திட்ட வரைபடங்களும் இல்லை. அடுத்த பெரும்போகம் தொடங்கப்போகின்றது. இவையெல்லாம் எப்போது நடக்கும் என்று தெரியவில்லை.

அதற்கிடையில் எப்படியும் அடுத்த ஆண்டு முற்பகுதியில் அரசுத் தலைவர் தேர்தலை நடத்துவதற்கான முனைப்புகளும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்க்கும்போது மக்கள் உண்மையான பிரச்சினைகளை உணர்ந்துகொண்டு அவை குறித்து ஆட்சியாளர்களிடம் கேள்வி எழுப்புவதைத் தவிர்க்கும் வகையில் அவர்களின் இன, மத உணர்வுகளுக்குத் தீனிபோட்டு அவர்களைத் திசை திருப்பும் உத்தி கன கச்சிதமாக நிறைவேற்றப்படுகின்றதோ என்கின்ற சந்தேகம் எழாமலில்லை.

அதே உத்தியின் மூலம்தான் இந்த நாடு கடந்த 75 ஆண்டுகளாகச் சீரழிக்கப்பட்டு இன்று முறிந்துபோன நிலைக்கு வந்து சேர்ந்திருக்கிறது. இனியும் அதே உத்தியைத்தான் இந்த அரசியல்வாதிகள் பின்பற்ற நினைப்பார்களாயின் அதைவிடக் கேவலம் எதுவும் இருக்கமுடியாது.

# வடக்கும் மலையகமும் ஒன்றாகவே பயணிக்க வேண்டிய தேவையுள்ளது!

### அருட்தந்தை சக்திவேல் இடித்துரைப்பு



வடக்கும் மலையகமும் ஒன்றாக இணைந்து பயணிக்கவேண்டிய தேவையுள்ளது என அருட்தந்தை சக்திவேல் தெரிவித்துள்ளார். மலையமக்களும் நீண்ட காலமாக அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் இன அழிப்பிற்குள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ள அவர் மலைகய மக்கள் இனப்படுகொலையையும் சந்தித்துக்கொண்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மலையக மக்களின் 200 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கிராமிய உழைப்பாளர் சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்வில் மலையக மக்களின் மாண்பைப் பாதுகாக்கும் அமைப்பு சார்பாக இந்தநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளோடும் சுயநிர்ணய உரிமை பொருத்தமாக வாழ்வதற்கான சூழ்நிலை போன்றவை உருவாகவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு தொடர்ந்தும் நான் பயணித்துக் கொண்டிருப்பவன். இதற்காகப் போராடிய உயிர்த் தியாகம் செய்த தமிழ் அரசியல்கைதிகளோடு தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கின்றேன். அந்த உணர்வோடும் உரிமையோடும் மலையகம் சம்பந்தமாக உரையாற்றவுள்ளேன்.

வடக்கு, கிழக்கு மக்கள் ஒருபோதும் போராட்டத்தை நிறுத்தவில்லை. வீதிகளில் நின்று போராடுகின்றனர். போராட்டம் உணர்வு பூர்வமானது. வடக்கு, கிழக்கு மக்களின் தற்போதைய அன்றாடப் பேச்சாக இனவழிப்பு இனப்படுகொலை சர்வதேச நீதி, குற்றவியல் நீதிமன்றம் போன்றன தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

இது வடக்கு, கிழக்குக்கு மட்டும் பொதுவான சொல்லல்ல. மலையகத்துக்கும் பொதுவான சொல். மலையக மக்களும் மிக நீண்ட காலமாக அமைதியான முறையிலே இன அழிப்பிற்கு உட்பட்டுள்ளதுடன் தற்போதும் சந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

அது போல மலையக மக்கள் இனப்படுகொலையையும் சந்தித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

1964 ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும் கூட இனப்படுகொலை தான். ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களைகண்முன்னே இழுத்துக்கொண்டு சென்று தகப்பன் இந்தியாவில் தாய் இலங்கையில் என பிளவுபடுத்தப்பட்ட வேதனை இன்னும் தொடர்ந்துகொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

அதே போல் 1931 ஆம் ஆண்டு சர்வஜனவாக்குரிமை கிடைத்த பின்னர் இவர்களின் வாக்குரிமையைக் கண்டு பயத்துவிட்டனர். 1937 ஆம் ஆண்டு புதிய சட்டமொன்றை கொண்டு வந்து அரசியல் ரீதியாக இனவழிப்பை மேற்கொண்டனர்.

அதன்பின் தொழிளாளர்களின் போராட்டம் எழுச்சியைக் கண்டு பயந்து அவர்களின் வாக்குரிமையைப் பறித்து விட்டனர். இதுவும் ஓர் இன அழிப்பு தான். அரசியல் ரீதியாகவும் ; பொருளாதார ரீதியாகவும் ; அபிவிருத்தி ரீதியாகவும் மக்கள் ஒடுக்குதலுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

தற்போது பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் கல்விகற்றுக்கொண்டிருப்பதானது வளர்ச்சியாகக் காணப்பட்டாலும் அந்தப் பிரதேசங்கள் அபிவிருத்தியடைவதில்லை. குறித்த பிரதேசங்களை அபிவிருத்தியடைய விடாது பேரினவாதம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

200 ஆண்டு காலமாக தொடர்ந்தும்ஒரேபிரதேசத்தில் உயிர் வாழ முடியாத நிலை உருவாகியுள்ளது. அவர்கள் வசிக்கும் நிலம் அவர்களுக்குசொந்தமில்லாமல் காணப்பட்டாலும் 1940 ஆம் ஆண்டிலிருந்து புதிய புதிய குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. தொடர்ந்தும் ஒரே இடத்தில் வாழும் மக்களுக்கு நிலம் சொந்தமில்லை என்றால் அதுவும் ஒருவகையில் இனவழிப்புத் தான்.

1841 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட போது 70000 பேர் இறந்திருக்கின்றார்கள். அவர்களுடைய கணக்கில் இறந்திருந்தாலும் எம்முடைய பார்வையில் அவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

பிரயாண வசதிகள், போதுமான உணவு வசதி உட்பட சுகாதார வசதிகள் வழங்கப்படவில்லைஎன்றால் இதைக் கொலை என்று தான் கூற முடியும். இந்தக் கொலையை பிரிட்டிஸ் அரசாங்கமே செய்தபடியால் அவர்களிடம் நீதி கேட்பதுடன் நட்டஈட்டையும் கோரவேண்டும். தொழிளாளர்களை மட்டும் வைத்துக்கொண்டு ஏனையவர்களை அந்தப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றும் திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

மக்களுக்குவழங்கப்படும் 7 பேர்ஜ் காணி எவ்வாறு போதுமானது. 31000 ஏக்கர் காணி வழங்கப்படவுள்ளதாக மஹிந்தராஜபக்ஷகூறியிருந்தார். இப்போது அது கொடுக்க மறுக்கின்றார்கள் என்றால் மலையகமக்கள் இப்பூமியில் வாழக்கூடாது என்பதற்காக பேரினவாதம்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நாங்கள் முள்ளிவாய்க்காலில் பிணங்களையும் எலும்புக்கூடுகளையும் கடந்து வந்த வரலாறுண்டு.

1890ஆம் ஆண்டளவில் கோப்பித்தோட்டம் முற்றாக அழிவடைந்த வேளையில் இவர்களுக்குசம்பளம்கொடுக்கக் கையிலே பணமில்லை. இதனால் பட்டினியில் விழுந்து சாகின்றார்கள். இறந்தவர்கள் ஆங்காங்கேவீசி எறியப்பட்டார்கள். இவ்வாறான சம்பவங்களையெல்லாம் இனவழிப்புஎன கூறமுடியும்.

எனவே முதலாளித்துவம் தன்னுடைய பொருளாதாரத்துக்காக இனவழிப்பு மேற்கொண்டிருக்கின்றது. தம்முடைய அரசியலைக் காப்பாற்றுவதற்காகவும் பேரினவாத அரசியலைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவும் இன்றுவரை இனவழிப்பை மேற்கொள்கின்றனர்.

1960 களில் மலையகத் தமிழர்களைத் தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டுமெனதமிழரசுக்கட்சி மும்மொழிவுகளை முன்வைத்தது. இன்றும் மலையக அரசியல்வாதிகள் மக்களுக்கான அரசியலைச் செய்யாமல் அயல் நாடுகளுகளுக்காகவும்மேற்கு நாடுகளுக்குமாக அரசியலை மேற்கொண்டுவருகின்றனர்.

எனவே இனவழிப்பு இனப்படுகொலை என்ற சொற்களுக்கு மத்தியிலே வடக்கும் மலையகமும் ஒன்றுசேர்ந்து ஒன்றாகப் பயணிக்க வேண்டிய தேவையுள்ளதாகக் குறிப்பிட்டார். (05)

# போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை கைது செய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி நாடப்படவில்லையாம்!



சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட போதகர்ஜெரோம் பெர்னாண்டோ இதுவரை இலங்கைக்கு வரவில்லை.

இந்நிலையில் அவரைக் கைது செய்வதற்கு இன்டர் போல் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் பொய்யானவைஎனபொலிஸ்ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

ஜெரோம் பெர்னாண்டோவை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு இன்டர்போலின் (சர்வதேச பொலிஸ்) உதவியைக் கோருவது தொடர்பில் இதுவரை சட்ட ஆலோசனைகள்கிடைக்கப்பெறவில்லை எனவும்அவர்தெரிவித்துள்ளார்.

சமூகவலைத்தளங்களில் பரப்பப்படுவதைப் போன்று அவருக்கு எதிராக சர்வதேச பிடியாணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இவருக்கு எதிராகசிவில்மற்றும் அரசியல் உரிமைகள் சாசனச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளைஆரம்பித்துள்ளதுடன்,இது தொடர்பில்கொழும்புகோட்டை நீதிவான்நீதிமன்றில்அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் அவர் கூறினார். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# வாடகை வாகனங்களை அடகுவைத்து மோசடி; சிப்பாயை கைதுசெய்யத் தயாராகும் பொலிஸார்!

வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்று அவற்றை அடகு வைத்து மோசடியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தில் இருவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பண்டாரவளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் இராணுவ சிப்பாய் எனவும் மற்றையவர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த இவர்கள் வர்த்தக நோக்கத்துக்காக பதுளை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களிடமிருந்து வாகனங்களை வாடகைக்கு பெற்றுக்கொண்டு சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிள், ஓட்டோ, வான் என பல வாகனங்கள் இவ்வாறு வாடகைக்குப் பெற்று வாகன உரிமையாளர்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில், வாகனங்களுக்கான வாடகைத் தொகையை முதல் சில மாதங்களுக்கு செலுத்தி வந்துள்ளனர்.

ஆனால் சில மாதங்களுக்குப் பிறகு திடீரென வாகனங்களுக்கு வாடகை கொடுப்பதை நிறுத்தி விட்டு தங்களது கைத்தொலைபேசிகளையும் நிறுத்தி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டபோதே சந்தேக நபர்களை தாம் வாடகைக்குப் பெற்ற வாகனங்களை அடகு வைத்துள்ளமை தெரிய வந்துள்ளது. (05)

# கொழும்பு கிராண்டபாஸில் 67 வயது பெண்ணிடம் 4 வகையான போதைப்பொருள்கள் கைப்பற்றல்!

சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கொழும்பு, கிராண்ட்பாஸ் ஹேனமுல்ல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 610 மில்லி கிராம் போதைப்பொருள், 50 கிராம், ஐஸ், 3 கிலோ 240 கிராம் கேரள கஞ்சா மற்றும் 900 மாத்திரைகள் ஆகியவற்றை கைப்பற்றியதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது. சந்தேக நபர் ஹேனமுல்லபிரதேசத்தில்வசிக்கும் 67 வயதான பெண்ணாவார். (05)

# வாழைச்சேனையிலுள்ள மாற்றுத் திறனாளிகள் தொழிற் பயிற்சி நிலையத்துக்கு திருமலை விசேட கல்வி ஆசிரியர்கள் விஜயம்!

ஹ்ஸ்பர்



சமூக சேவைத் திணைக் களத்தின் கீழ் இயங்கி வரும் வாழைச்சேனையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற் பயிற்சி நிலையத்தை அண்மையில் திருகோணமலையில் விசேட கல்வி பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பார்வையிட்டனர்.

எதிர்காலத்தில் மாணவர்களை தொழிற் கல்வியில் விசேட தேவையுடைய மாணவர்களை இணைப்பது தொடர்பில் பல விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன. இதில் திருகோணமலையை சேர்ந்த 31 விசேட கல்வி பிரிவு ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் தொழிற்பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி ஜெ.சுகந்தினி, விசேட கல்வி பிரிவு உதவி பணிப்பாளர் அகிலன், திருகோணமலை மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் த.பிரணவன் உட்பட பிரதேச செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05)

# சுகாதாரச் சீர்கேடான விடயங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குக!



யாழ்ப்பாணம் கல்வியங்காடு செங்குந்தா பொதுச்சந்தை கட்டடத்தொகுதியில் மேல் கடைகளுக்கு ஏறிச்செல்வதறகென அமைக்கப் பட்ட படிகளில் மதுபானம் அருந்துதல், புகைத்தல், சீறுநீர்கழித்தல் போன்ற செயற்பாடுகள் இடம் பெற்றுவருகின்றன.

குறித்த பகுதிகளை சுத்தம் செய்வதற்கும், சுகாதார சீர்கேடான விடயங்களைக் கட்டுப்படுத்துவ தற்கும் சந்தை வளாகத்தை சுத்தமாக வைத்திருப்பதற்கு யாழ்.மாநகரசபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என செங்குந்தா வர்த்தகர்கள் மற்றும் சந்தைக்கு வரும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# கண்ணாடிபெட்டி உடைத்து புத்தரின் சிலையும் கவிழ்ப்பு!

## இமதுவவில் சம்பவம்

இமதுவ அகுலுகஹா பிரதேசத்தில் காணப்படும் புத்தர் சிலைவைக்கப்பட்டுள்ள கண்ணாடி பெட்டிஒன்று உடைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை கவிழ்க்கப்பட்டுள்ளதாக இமதுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் புத்தர் சிலைக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த புத்தர் சிலை மலர் தூவப்பட்டிருந்த பகுதியில் முகம் குப்புற வீழ்ந்து காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதேச மக்கள் பலர் பொலிஸுக்கு தகவல் வழங்கியதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# குளத்தை மீட்பதற்காக மக்கள் போராட்டம்

## வெள்ளப்பள்ளத்தில் நேற்று நடந்தது

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் உள்ளது இந்தக் குளம் என்கிறார்கள் மக்கள். குடிதண்ணீர், போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில்



புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள உடையார்கட்டு கமநலசேவைத்திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குளமாகக் காணப்படும் வெள்ளப்பள்ளம் குளத்தை பொதுக் குளமாக்கி மக்களின் பயன்பாட்டுக்குத் திருப்பித் தரவேண்டும் என்று வலியுறுத்தி அப்பகுதிமக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமது பயன்பாட்டில் கால்நடைகளுக்கான மேச்சல் மற்றும் தண்ணீர், மீன்பிடி, மேட்டு நில பயிர்செய்கை எனப் பலவற்றுக்கும் இது தங்களுக்குப் பயன்பட்டு வந்துள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.



தற்போது இந்தக் குளத்தினை தனிநபர் ஒருவர் எல்லைக் கற்கள் போட்டு வேலி அடைத்து வைத்துள்ளார் என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். குளத்தை மீட்டுத்தரக்கோரியே கிராமமக்கள் பல டசின் கணக்கான மக்கள் பங்கெடுத்தனர். பதாதைகளைத் தாங்கியவாறு எதிர்ப்பைக்காட்டினர். அத்தோடு அங்கு நாட்டப்பட்டிருந்த தூண்களையும் அகற்றினர்.

இதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு சென்ற மக்கள் அங்கு பிரதேச செயலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்தோடு தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதேச செயலாளரிடமும் கையளித்தனர்.

குளம் அமைந்துள்ள காணி தனியார் ஒருவருக்குச் சொந்தமாகக் காணப்படுகின்றது.

அதேநேரம் அதிலுள்ள குளத்தினைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு விவாசாயத் திணைக்களத்திடம் இருக்கின்றது மேலதிகமாக என்ன செய்யலாம் என்பது தொடர்பில் மாவட்டச் செயலருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.






# தொழிநுட்பக் கோளாறினால் உதயதேவி சேவை பாதிப்பு!

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த உதயதேவி கடுகதி ரயில் சேவை தொழில்நுட்ப கோளாறு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த ரயில் மஹவ நிலையத்தில் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

கல்ஓயா ரயில் நிலையத் திற்கு அருகில் மாடு ஒன்று ரயிலுக்கு குறுக்காக பாய்ந்ததில் ஏற்பட்ட விபத்தையடுத்து குறித்த தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளதாக மஹவ ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திங்கட்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் மஹவ ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட ரயில் தொழில்நுட்பக் கோளாறை சீர்செய்த பின்னர் அதிகாலை 4.00 மணியளவில் கொழும்பு நோக்கி பயணிக்கத் ஆரம்பித்தது.

இதனால் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பயணிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (05)

# சாதாரண தரப் பரீட்சை எழுதும் டெங்கு பாதித்த 18 மாணவர்கள்!

தேசிய தொற்று நோய் நிறுவனத்தில் கல்விப்பொதுத் தராதர சாதாரணதரப்பரீட்சை நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் டெங்குநோயால் பாதிக்கப்பட்ட 18 மாணவர்கள் பரீட்சை எழுதுகின்றனர் என தேசிய தொற்றுநோய்கள் நிறுவகத்தின் பணிப்பாளர் வைத்தியர் தினேஷ் கொக்கலகே தெரிவித்தார்.

தேசிய தொற்றுநோய் வைத்தியசாலையில் தற்போது 96 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.05.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 14 திங்கட்கிழமை 29.05.2023 கதிர் 72


## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து மீண்டும் எண்ணெய்க் கசிவுகளா?

இலங்கைக் கடற்பரப்புக்குள் தீவிபத்துக்குள்ளாகிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் மூழ்கிய இடத்தில் மீண்டும் எண்ணெய் கசிவு ஏற்பட்டிருப்பததாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடலடியில் மூழ்கிக் கிடக்கும் கப்பலின் பெரும் பாகத்தைல் இருந்து மீண்டும் எண்ணெய் கசிவு ஏற்படுகின்றது என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

வத்தளை –மீ எலகந்த கடற் பகுதியில் இந்த எண்ணெய்க் கசிவைக் காண முடிவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கிறார்கள்.

சிங்கப்பூர் நிறுவனத்துக்கு சொந்தமான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் 2021 மே 20 கொழும்பு

2

## யாழ். விபத்தில் இளைஞன் சாவு





யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள முட்டாஸ் கடை சந்தி அருகில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உடல் நசுங்கி உயிரிழந்தார்.

மீசாலையைச் சேர்ந்த இராஜரட்ணம் அபிதாஸ் (வயது 29) என்பவரே உயிரிழந்தார்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது லொறியுடன் விபத்து ஏற்பட்டு அதன் சில்லினுள் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (03)

### இன மத மோதலை உருவாக்கும்

# ராஜபக்ஷக்களின் மயிர்க்கூச்செறியும் கதைகளுக்கு இனி இடமேயில்லை



### விஜித முனி சொய்ஸா தெரிவிப்பு

இன, மத மோதலை உருவாக்கும் வகையில் மயிர்க்கூச்செறியும் கதைகளைக் கூற இயலாத நிலைமை ராஜபக்ஷக்களுக்கு ஏற்பட்டுள்ளதாக விஜித் விஜத முனிசொய்ஸா தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை நாடு பல்லினங்களையும் மதங்களையும் கொண்டது. இந்த நாட்டில் எந்தவொரு நபருக்கும் இனங்களையோ, மதங்களையோ நிந்திப்பதற்கு உரிமைகள் இல்லை.

அவ்வாறான நிலையில் நிந்தனைகளைச் செய்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் நானும் உள்ளேன்.

இந்த நாட்டில் காலம் காலமாக, இனவாதம், மதவாத்தினைத் தோற்றுவித்து அரசியல் இலாபமடையும் நிலைமைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

இருப்பினும், இன, மத ரீதியாக மயிர்க்கூச்செறியும் கதைகளை பொதுவெளியில் சொல்வதற்கான இயலுமையை ராஜபக் க்கள் இழந்துள்ளனர்.

இருப்பினும், அவர்கள் மத முரண்பாடுகளை, இனமுரண்படுகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கு இன்னமும் முயற்சிக்கின்றார்கள் - என்றார்.

## பௌத்தத்தைக் காப்பதாகக் காட்டி மக்களைத் திசை திருப்புகிறது ஆட்சி

பௌத்த மதத்திற்காக தோள்கொடுப்பதாகக் காண்பித்துக்கொண்டு நாட்டின் விவகாரங்களை வேறுதிசைக்கு இழுத்துச் செல்வதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர் என்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இராஜகிரியவில் உள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸின் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

கடந்த இரண்டு வாரங்களாக நாட்டில், போதகர் ஜெரோம் பின்னர் நடாா, போன்றவர்களைப் பற்றிய பேச்சுக்கள் தான் முன்னிலை பெற்றுள்ளன. இந்த மாதியான விடங்கள் பூதாகரமாகுவதற்குக் காரணம், ஆட்சியாளர்களின் திட்டமிட்ட செயற்பாடுகளே.

இந்த ஆட்சி வெளிப்படையாகப் பௌத்த மதத்திற்கு தோள்கொடுப்பது போன்று காட்டினாலும், அதன் ஊடாக மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் திசைதிருப்புவதற்கே முயல்கின்றது.

இந்த விடயத்தில் பொது மக்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும் – என்றார்.

## நாட்டின் எதிர்காலத்தை ஒட்டுமொத்தமாக அழிக்கும் பாதையில் பயணிக்கிறார் ரணில்

### ஜேவிபி தலைவர் அனுரகுமார கடும் தாக்கு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கட்டியெழுப்பும் பாதையில் பயணிக்கவில்லை. அவர் நாட்டின் எதிர்காலத்துக்கான ஒட்டுமொத்த பாதைகளையும் அழிக்கும் செயற்பாட்டிலேயே ஈடுபட்டிருக்கின்றார் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமரா திஸாநாயக்க தெரிவித்தார்.

மிஹிந்தலையில் இன்று காலை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகளாகியுள்ளது. இந்த 75 ஆண்டுகளில் நாட்டை இல்லாமலாக்கியுள்ளனர். மக்களை நடுத்தெருவுக்கு கொண்டு வந்துள்ளனர்.

இந்தச் செயற்பாட்டில் ரணில் விக்கிரமசிங்கவினதும் கணிசமான பங்கு இருக்கின்றது. அவ்வாறான வர் நாட்டை இனி மீட்டெடுப்பார் என்று எவ்வாறு நம்பிக்கை கொள்ளமுடியும்?

அவர் மீண்டும் பழை–யவற்றையே கையில் எடுத்துள்ளார். நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கின்றார். தேவைக்கும் அதிகமாகக் கடன் வாங்குகின்றார். ஆக, பழைய செயற்பாடுகள் தான் முன்னெடுக்கப்படுகின்றன. விற்பனை செய்வதும், கடன்பெறுவதும் இந்த நாட்டிற்கு எதிர்காலத்தை மிச்சம் விட்டு வைக்காது.

தற்போது சினோபெக் நிறுவனம் நாட்டுக்குள் வந்துள்ளது. இந்தியாவின் ஐ.ஓ.சியும் நாட்டுக்குள் உள்ளது. இவர்களால் பெற்றோலியத்தை வழங்க முடியும் என்றால் ஏன் இலங்கையால் அதனை முன்னெடுக்க முடியாதுள்ளது?

அடுத்துவரும் நாட்களில் நான்கு நீர் மின் உற்பத்தி நிலையங்களை தனியாருக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதனால் எமது நாட்டின் வளமான நீர் வீழ்ச்சிகளும் தனியாருக்குச் சொந்தமாகும் நிலைமையே உருவாகப்போகின்றது.

ஆகவே, ரணில் விக்கிரமசிங்க நாட்டை கட்டியெழுப்புகின்ற பாதையில் பயணிக்கவில்லை. மாறாக நாட்டின் எதிர்காலத்திற்காகப் பயணிக்கக்கூடிய பாதைகள் அனைத்தையும் அழிப்பதற்கான பயணத்தினையே மேற்கொண்டுள்ளார் – என்றார்.

## பாதயாத்திரையில் வந்த யாழ் .யாத்திரீகர் மாமாங்கத்தில் திடீர் சாவு!

(வி.ரி.சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச் சந்நதியிலிருந்து கதிர்காமம் நோக்கிப் பாதயாத்திரையாகச் சென்றவர்களில் ஒருவரான யாழ்ப்பாணம் யாத்திரீகர் மட்டக்களப்பு மாமாங்கத்தில் திடீரென்று உயிழந்துள்ளார்.

இன்று காலை 6:30 மணி அளவில் அவரது உயிர் பிரிந்தது என்று யாத்திரிகர் குழுத் தலைவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கைதடியைச் சேர்ந்த கே. சிவலிங்கம் (வயது 70) என்பவரே இவ்வாறு திடீரென இயற்கையெய்தினார்.

யாழ்ப்பாணம் செல்வச் சந்நதியிலிருந்து ஜெயா வேல்சாமி தலைமையில் 62 பேர் கொண்ட யாத்திரிகர்கள் குழு 23 நாட்களாக பாதயாத்திரையாக கதிர்காமத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பு மாமாங்கத்தை வந்தடைந்த அவர்கள் இன்று காலை அங்கிருந்து புறப்பட இருந்தசமயம் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது.

மட்டக்களப்பு பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் திடீர் இறப்பு விசாரணை அதிகாரியின் விசாரணைக்குப் பின்னர் சடலத்தை மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர். இது தொடர்பாக பாதயாத்திரை குழுத் தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்ததாவது:



ஏழு வருடங்களாக யாத்திரிகர் சிவலிங்கம் எங்களுடன் பயணித்து வருபவர். வழமை போல இன்று காலை மாமாங்க ஆலயத்தில் பஜனை முடித்த பிற்பாடு நாங்கள் பணிஸ் மற்றும் தேநீரை அருந்திவிட்டு புறப்பட இருந்த சமயம் சிவலிங்கம் துள்ளி குதித்தாடி சந்தோத்தில் இருந்தார்.

மறுகணம் அவர் மயக்கமுற்று சரிந்து விழுந்தார். உடனே நாங்கள் அம்புலன்ஸ்க்கும் 119க்கும் தகவல் கொடுத்தோம். அம்புலன்ஸ் வருவதற்கு இடையில் அவரது உயிர் பிரிந்துவிட்டது.

பின்பு நாம் பொலிஸாருடன் தொடர்பு கொண்டோம். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வந்து என்னையும் இன்னும் சிலரையும் விசாரணைக்குட்படுத்தினார். அதன் பின்பு பிரேதம் கொண்டு செல்லப்பட்டது.

எனது பாதயாத்திரை வரலாற்றில் பாதை யாத்திரையின் பொழுது ஒருவர் உயிரிழந்த சம்பவம் இதுவாகத்தான் இருக்கின்றது. என்றார்

## சத்தா ரத்ன தேரர் அனுராதபுரத்தில் கைது மத நல்லிணக்கத்தைச் சீர்குலைத்தாராம்

இராஜாங்கனை சத்தா ரத்ன தேரர் இன்று காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் பகுதியில் வைத்து அவர் கைது செய்–யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பில் விசாரணைகளை நடத்தும் முகமாக தேரர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்தது.

சத்தா ரதன தேரர் சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்த கருத்துக்கள் வாயிலாக அமைதியின்மை ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது என பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் வெளியிட்ட கருத்துக்களுக்கு அமைவாகவே குறித்த தேரர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது

## மதத்தைத் திரிபுபடுத்துவதற்கு எதிராக புதிய சட்டம் வருமாம்

மதங்களை திரிவுபடுத்தும் செயற்பாடுகளுக்கு எதிராகப் புதிய சட்டத்தினைக் கொண்டுவருவதற்கு தயாராவதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். ஹொரனவில் நடைபெற்ற சமயவழிபாடுகளை அடுத்து செய்தியாளர்களிடம் பேசினார் அவர்.


இலங்கை நாடு பக்தி மிக்கவர்கள். அதன் குடிமக்கள் பக்தி மிக்கவர்கள். அந்தப் பக்தியை முட்டாள்த்தனமானது என்று கூறமுடியாது.

எம்மைப் பொறுத்தவரையில் மத உரிமைகளை நாம் உறுதிப்படுத்தும் அதேநேரம் மதங்கள் தொடர்பில் திரிவுபடுத்தும் செயற்பாட்டையும் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

அதற்காகப் புதிய சட்டத்தை அமைச்சரவையின் அனுமதியுடன் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயாராக உள்ளேன் – என்றார்.

## சம்மாந்துறை பாடசாலை முன்பாக ஏட்டிக்குப் போட்டியாக போராட்டம்

### அதிபர் இடமாற்றத்தை ஏற்றும் மறுத்தும்






(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட ஜமாலியா வித்தியாலயத்தின் அதிபரை இடமாற்றம் செய்ததை ஏற்றும் மறுத்தும் இன்று காலை வலயக் கல்வி அலுவலகம் முன்பாக ஒரு மணி நேரம் ஏட்டிக்குப் போட்டியாகப் போராட்டம் இடம்பெற்றது.

இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரியும், இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டாமென்று கோரியும் இரண்டு குழுவினர் எதிரெதிரே நின்றபடி குரல் உயர்த்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அதிபருக்குச் சார்பான விவரங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர். அதே நேரம் அதிபரின் இடமாற்றத்தை ஆதரித்தோர் அதிபருக்கு எதிரான கோங்களை எழுப்பினர். கட்டடம் கட்டுவதில் அதிபர் முறைகேட்டில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டினர்.

காலை 8 மணி முதல் 9 மணி வரை சுமார் ஒரு மணி நேரம் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தையொட்டிய சம்மாந்துறை பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்ததுடன் போக்குவரத்தை சீர்செய்ததுடன் ஆர்பாட்டக்காரர்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அதிபர் வேண்டும் என்றும் அதிபரின் இடமாற்றத்தை ரத்து செய்யாது விட்டால் எங்கள்

2

# கல்முனை விவகாரம் முதல் முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆராய அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் உபகுழு அமைப்பு!





அம்பாறை மாவட்ட முஸ்லிங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிலும் குறிப்பாக கல்முனை விவகாரம் தொடர்பில் ஆராயும் அம்பாறை மாவட்ட அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளன விசேட கூட்டம் கடந்த சனிக்கிழமை சம்மேளனத் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ. அஸீஸ் தலைமையில் நிந்தவூர் ஜும் மாப் பள்ளிவாசல் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும், புரிந்துணர்வையும் வலுப்படுத்தும் நோக்கில் செயற்பட்டுவரும் அம்பாறை மாவட்ட அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளனம் அம்பாறை மாவட்ட முஸ்லிங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், கல்முனை உப பிரதேச செயலக விவகாரத்தையும் பற்றி கலந்துரையாடியதுடன் கல்முனை உப பிரதேச செயலக விவகாரத்துக்கான தீர்வை எட்டும் விதமாக உபகுழுவொன்றை நியமித்துள்ளது.

அந்த உப குழு கல்முனை உப பிரதேச செயலக விவகாரத்தில் உள்ள விடயங்களை கையாளவுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தில் அதிக முஸ்லிங்கள் வாழும் நகரம் என்ற அடிப்படையிலும், இலங்கை முஸ்லிங்களின் முகவெற்றிலையாக கல்முனை அமைந்துள்ளது என்ற அடிப்படையிலும் முஸ்லிங்களின் வர்த்தக நிலையங்கள், குடியிருப்புக்கள் நிறைந்துள்ள கல்முனையின் இந்த விடயத்தை சிறப்பாக கையாண்டு உரியவர்களிடம் இருந்து தீர்வை பெற முயற்சிகளையும் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மற்றுமொரு தீர்மானமாக தமிழ் மக்கள் கூடுதலாக வும் முஸ்லிங்கள் குறைவாகவும் வாழும் அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களில் முஸ்லிங்களுக்கு இடம்பெறும் அநீதிகள், பாரபட்சங்களை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், அமைச்சின் செயலாளர்கள், அமைச்சர்கள், உரிய அதிகாரிகளுக்கு எடுத்துரைத்து உரிய தீர்வை பெற இந்த உபகுழு செயற்பட தீர்மா னம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் சம்மேளன செயலாளர் ஏ.எல். அன்வர்டீன், பொருளாளர் எஸ்.எம் சபீஸ், உறுப்பினர்கள், உலமாக்கள் மற்றும் புத்திஜீவிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (05)

## எக்ஸ்பிரஸ் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகப் பகுதிக்கு அருகில் திடீரென தீப்பற்றி எரிந்த பின்னர் கடலில் மூழ்கியது..

இந்நிலையில், சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் அஜித் மான்னப்பெரும இது தொடர்பில் அப்பகுதிக்கு நேரில் சென்று ஆராய்ந்துள்ளார்.

அவர், குறித்த பகுதியில் எண்ணெய் படமங்கள் காணப்படுவதற்கான அடையாளங்களை மீனவர்களின் உதவியுடன் அவதானித்ததோடு, அதற்கான காரணங்களைக் கண்டறிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளார்

## சம்மாந்துறை ..





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளின் விடுதலைப் பத்திரத்தை தா என்றும் குரல் எழுப்பினர்.

அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டாமென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பாடசாலை அபிவிருத்திக் குழுவுக்கு தெரியாமல் சுமார் 42 இலட்சம் ரூபா பெறுமதியான கட்டட நிர்மாணத்தில் அதிபர் ஊழல் செய்தார் என்பதால் அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டாமென்றும் கோசமிட்டனர்.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.எம்.எம். செய்யத் உமர் மௌலானா ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இருதரப்பினருடனும் கலந்துரையாடி அவர்களினால் கையளிக்கப்பட்ட மனுக்களையும் பெற்றுக்கொண்டார். அத்தோடு

தங்களின் கோரிக்கைகளை மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர்களுக்கு அறிவித்து அவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கைகளை எடுப்பதாகவும் உறுதியளித்தார். இதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

# இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவம் 06 ஆம் கட்ட இறுதி ஒருநாள் பயிற்சி பட்டறை!









மனித மேம்பாட்டு அமைப்பால் இளைஞர், யுவதிகள், அமைப்பின் அங்கத்தவர்களுக்கான 6 கட்டங்களாக நடைபெற்ற தலைமைத்துவப் பயிற்சி பட்டறையின் இறுதிக் கட்டம் தன்னம்பிக்கை உள்ள எதிர்கால இளைஞர் யுவதிகளை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளைக் அடிப்படையாக கொண்டு கடந்த சனிக்கிழமை வாழைச்சேனை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் தலைவர் எஸ்.ஏ.முகம்மட் அஸ்லத்தின் வழிகாட்டலிலும், அமைப்பின் சாய்ந்தமருது அமைப் பாளர் ஆர். அல்முன்தஸீரின் ஒருங்கிணைப்பிலும், அமைப்பின் வாழைச்சேனை பிரதேச அமைப்பாளரான இஸட்.எப். ஸிஹானி, ஓட்டமாவடி பிரதேச ஒருங்கிணைப்பாளரான இஸட்.எப். ஸிமானி ஆகியோர்களின் ஏற்பாட்டிலும் தேசிய இளைஞர் படையணி வாழைச்சேனை பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரியான லெப்டினன் கேர்ணல் எம்.எச்.எம்.ரவூப் தலைமையிலும் இளைஞர் - யுவதிகளுக்கான விரிவுரைகளும், பயிற்சிகளும், கள செயற்பாடுகளும் இதன்போது நடத்தப்பட்டன.

இப் பயிற்சி பட்டறையில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் - யுவதிகள் கலந்து கொண்டதுடன் அன்று மாலை லெப்டினன் கேர்ணல் எம்.எச்.எம்.ரவூப்பால் கலந்து கொண்ட இளைஞர் - யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# புலமையாளர்கள் கௌரவிப்பு விழா











(வி.ரி.சகாதேவராஜா)

இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரியின் மகத்துவம் 2 எனும் புலமையாளர் கௌரவிப்பு மாண்புறு விழா அதிபர் எம்.ஏ.எம். பஜீர் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானாவும் கௌரவ அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.அப்துல் மஜீட், கோட்டக் கல்விப் பணிப்பாளர் யுஎல்.மகுமூட்லெவ்வை, அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி விரிவுரையாளர் ஏ.நளிம் மற்றும் பள்ளிவாசல்

நம்பிக்கையாளர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழுவினர் கலந்து சிறப்பித்தனர்.

இறக்காமம் கோட்டத்தில் அதிகூடிய 158 புள்ளிகளை பெற்ற ஏஎம். பாத்திமா நுஸைபா உள்ளிட்ட சித்தி பெற்ற 23 மாணவருக்கும் பதக்கமும் கேடயமும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பெற்றோர் சார்பில் ஆசிரிய ஆலோசகர் எஸ்எல்ஏ. முனாவ் அதிதிகள் மற்றும் அதிபருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். (05)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சிலாபம் களப்பால் ஏற்படும் சுகாதார அச்சுறுத்தலுக்கு மிகவிரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு





சிலாபம் களப்பு மாசடைதல் தொடர்பான பிரச்சினையை உடனடியாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்வதுடன் விசேட அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்து தீர்வைப் பெற்றுத் தருவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சிலாபத்துக்கான கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிலாபம் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிலாபம் களப்பினுள் அப்குதியிலுள்ள இறால் பண்ணைகளால் வெளியேற்றப்பபடும் இரசாயனம் கலந்த கழிவுநீர் மற்றும் சிலாபம் நகர சபை, சிலாபம் பொது வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்கள் கலப்பதன் காரணமாக களப்பு நீர் கடுமையாக மாசடைந்துள்ளதாக கடற்றொழிலாளர்கள் அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் அப்பகுதிக்கான கண்காணிப்பு விஜயமொன்றை கடந்த சனிக்கிழமை துறைசார் அதிகாரிகள் சகிதம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் நேரடியாக நிலமைகளை அவதானித்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில், சிலாபம் களப்பு மாசடைவதற்கு, இறால் பண்ணைகளால் வெளியேற்றப்படும் இரசாயனம் கலந்த கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் களப்பில் கலப்பதுவே காரணமாக இருப்பதை தான் அவதானித்தார் எனவும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிலாபம் பொது வைத்தியசாலை மற்றும் நகர சபையால் வெளியேற்றப்படும் குப்பை கூளங்கள் மற்றும் கழிவுப் பொருள்களும் களப்பு மாசடைதலுக்கு முக்கிய காரணம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக சிலாபம் பிரதேச சபைத் தலைவர் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்படும் எனவும் அதில் கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, நாரா மற்றும் நெக்டா ஆகிய நிறுவனங்களின் உயரதிகாரிகள் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக செயற்படுவார்கள் என்றும் தெரிவித்தார். இதன்போது எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டபோது சிலாபம் பிரதேச கடற்றொழிலாளர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளனர் எனவும் அத்துடன் சிலாபம் கடற்றொழில்துறைமுகவானொலிதொடர்பாடல் கட்டமைப்பு சரியாக இயங்குவதில்லை போன்றவிடயங்கள் கடற்றொழிலாளர்களால் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப் பட்டது.

அதற்கு பதிலளித்த அமைச்சர், வானொலி தொடர்பாடல் கட்டமைப்பை புனரமைப்பதற்கு சிறிது கால அவகாசம் தேவையெனவும், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பான விவரங்களை வழங்குமாறும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, மேலதிக செயலாளர் நாமல் தலங்கம, நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கமல் தென்னக்கோன், நெக்டா அமைப்பின் பணிப்பாளர் நாயகம் திருமதி அசோகா, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த உள்ளிட்ட உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# எக்டோ நூலக வாரம் -2023 அங்குரார்ப்பண நிகழ்வுகள்!









கல்முனை கல்வி கலாசார மேம்பாட்டுத் தாபனத்தால் (எக்டோ) ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் எக்டோ நூலகத்தின் 20 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மாணவர்கள் மற்றும் வாசகர்களை நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைத்துக்கொள்ளுதல், வாசிப்பு திறனை மேம்படுத்துதல் மற்றும் நூல்களை சேகரித்தல் போன்ற நோக்கத்துக்காக 27.05.2023 தொடக்கம் 04.06.2023 வரை 'எக்டோ நூலக வாரம் - 2023' எனும் தொனிப்பொருளில் செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த சனிக்கிழமை எக்டோ நூலகத்தின் கேட்போர் கூடத்தில் தாபனத்தின் தலைவர் எஸ்.எல்.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலியும் விடே அதிதிகளாக கல்முனை கமுஃகமுஃ அல்-பஹ்ரியா மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) அதிபர் எம்.எஸ்.எம். பைசால், கல்முனை கமுஃகமுஃ இஸ்லாமாபாத் முஸ்லீம் வித்யாலய அதிபர் ஏ.ஜி.எம். றிசாத், கல்முனை கமுஃகமுஃ அஷ்-ஹுரா வித்தியாலய அதிபர் எம்.எச். எஸ்.ஆர். மஜீதியா, கல்முனை கமுஃகமுஃ அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலய பிரதி அதிபர் ஐ.எல்.எம். ஜின்னாஹ் மற்றும் கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், அப்துல் கபூர் ஞாபகார்த்த கல்லூரியின் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நூலக அங்கத்தவர்கள், அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கலந்துகொண்ட அனைத்து அதிதிகளாலும், வாசகர்கள், மாணவர்களாகிய அனைவருக்கும் தங்களது வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்கும் அறிவுத்திறனை விருத்தி செய்வதற்கும் இதர கல்வித் தேவையைத் தேடிப் படிப்பதற்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

இதன் மற்றுமொரு அங்கமாக, இக்குறித்த காலப்பகுதியினுள் நூலகத்தில் புதிய அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் மாணவர்கள், வாசகர்கள் மற்றும் அங்கத்துவத்தை புதுப்பிப்பவர்களுக்கு அங்கத்துவக்கட்டணம் இலவசமாக்கப்பட்டுள்ளது. அத்தோடு புதிதாக இணைந்து கொள்ளும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக 10 மாணவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், நூலகத்திற்காக புத்தகங்களை சேகரிக்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் கல்முனை கமுஃகமுஃ அஷ்-ஹுரா வித்யாலய அதிபர் எம்.எச்.எஸ். ஆர். மஜீதியா, அப்துல் கபூர் ஞாபகார்த்த கல்லூரியின் பழைய மாணவி பாத்திமா நஸ்கத் ஆகியோரால் ஒரு தொகுதி நூல்கள் எக்டோ நூலகத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன.

மேலும், இத்தாபனம் மற்றும் நூலகத்தின் வளர்ச்சியில் சிரேஷ்ட ஆலோசகர்களாக இருந்து வழிநடத்திய பேராசிரியர் மர்ஹூம் ஏ.எல்.எம். அப்துல் கபூர், முன்னாள் அதிபர் மர்ஹூம் எம்.வை.எம். எச். காரியப்பர் ஆகியோரை நினைவு கூரும் முகமாக இந்நிகழ்வில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

## புங்கையூர் புலம்பெயர் உறவுகள் ஆதரவில் புங்குடுதீவில் விளையாட்டுப் போட்டிகள்

பாரியளவிலான பரிசுத்தொகையுடன் நடத்தப்படவுள்ள இந்தச்சுற்றுப்போட்டிகளில் புங்குடுதீவிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற இரு அணிகளும், யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரு அணிகளும், தீவகத்தைச் சேர்ந்த ஏனைய இரு அணிகளும் பங்குபற்றவுள்ளன. புங்குடுதீவு வீர ,வீராங்கனைகளின் உச்ச திறமைகளை ஒருங்கிணைந்தவாறு வெளிப்படுத்தும் வகையிலும் , விளையாட்டு துறையில் மாகாண மற்றும் தேசிய ரீதியில் புங்குடுதீவின் பெயர் பொறிக்கப்படும் நோக்கில் ஓர் ஆரம்பபுள்ளியாக இந்த விளையாட்டு போட்டித்தொடர் ஏற்பாடு எதிர்வரும் ஜுன் 21, 22 ஆம் மற்றும் ஜுன் 26 ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## முல்லை மாவட்டத்துக்கு பதில் செயலர் நியமனம்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அரசாங்க அதிபராக கடமையாற்றிவந்த க.விமலநாதன் கடந்த 20.05.2023 அன்று அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்று சென்றநிலையில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய கனகசபாபதி கனகேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபராக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 29.02. 2020 அன்று மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்ற முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கதிராமத்தம்பி விமலநாதன் தனது 60 ஆவது வயதில் 20.05.2023 அன்று அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்று சென்ற நிலையில் 21.05.2023 இல் இருந்து முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபராக கனகசபாபதி கனகேஸ்வரனை நியமிப்பதாக 24.05.2023 அன்று கடிதம் மூலம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராக கனகசபாபதி கனகேஸ்வரன் கடமைகள் பொறுப்பேற்றுக் கொண்டார். (05)

## சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் வருடாந்த பரிசளிப்பும், புதிய மாணவர் வரவேற்பும்



சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு கலாபீடத்தின் ஆளுநர் சபை உறுப்பினரும், கல்விப்பிரிவு தலைவரின் தலைமையில் கமுஃ கமுஃ அல்- ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

குர்ஆன் மனனமிடும் இஸ்லாமிய பல்கலைக்கழகமான தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் பரீட்சைகளில் திறமை சித்தி பெற்ற மாணவர்கள், சிறந்த வரவை பேணிய மாணவர்கள் உட்பட பல்வேறு துறைகளில் சாதித்த மாணவர்கள் மற்றும் இவ்வாண்டுக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இருதய நோய் விசேட வைத்திய நிபுணர் அல்ஹாபிழ் டாக்டர் எம்.ஏ. நௌசாத் அலி கலந்துகொண்டு மாணவர்களைக் கௌரவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.கே. சனூஸ், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் என்.எம்.றிஸ்மீர் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வின் விசேட உரையை சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் தவிசாளர் சட்டத்தரணி மௌலவி என்.எம்.ஏ. முஜீப் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் உலமாக்கள், பாடசாலை அதிபர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் நிர்வாகிகள், ஆளுநர் சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிர்வாகத்துறையும் சீராகவேண்டும்

இலங்கை பொருளதார ரீதியில் பாதாளத்தில் வீழ்ந்ததற்கு நாட்டை 75 வருடங்களாக ஆட்சி செய்த அரசியல்வாதிகள் முழு முதற் காரணகர்த்தாக்கள். அந்தக் கட்சி இந்தக் கட்சி என்று இல்லாது அனைத்துக்கட்சிகளுமே நாட்டைப் பொருளாதார ரீதியில் சீரழித்துள்ளன. நிலையான, தன்னிறைவான பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்குப் பதில் தங்கிவாழும் பொருளாதாரத்தையும் நவீன அடிமைத்துவத்தையும் ஏற்படுத்தியதன் மூலம் இந்த அரசியல்வாதிகள் நாட்டைப் படுகுழிக்குள் தள்ளினர். அவர்களுக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாமல் நாட்டின் நிர்வாக வர்க்கமும் அதே தவறைச் செய்தன. அரசியல்வாதிகளால் நிர்வாகத்துறையும் நிர்வாகத்துறையால் அரசியல்வாதிகளும் பயனடைந்தது மட்டுமல்ல நாட்டைப் பாழ்படுத்தியதிலும் அவர்கள் இருதரப்பினரும் சம பங்காளிகளாகவே உள்ளனர்.

இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 27ஆயிரம் கோடி ரூபா வரியை அறவிடத் தவறியுள்ளதாக, தேசிய பொருளாதார மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற் பார்வைக்குழு தெரிவித்துள்ள கருத்து இதனை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளது.

அதுமட்டுமல்ல முறையாக வரியை செலுத்தாத பெரும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் 100 பேரின், சரியான தகவல்கள் இறைவரித் திணைக்களத்திடம் இல்லை என்றும் துறைசார் மேற்பார்வைக்குழு கண்டறிந்துள்ளது.

“நாட்டில் முன்னெடுக்கப்படும் பெருமளவு பரிவர்த்தனைகள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உரிய முறைகள் எதுவும் இறைவரித் திணைக்களத்திடம் இல்லைஎன்பதுதொடர்பில், இந்த மேற்பார்வைக்குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அறவிடுவதற்கு தவறவிடப்பட்டுள்ள பணத்தை மீள பெற்றுக்கொள்வதற்கு பொறிமுறை ஒன்றைத் தயாரிக்கவும், புதிய இறைவரிச் சட்டங்களை தயாரிப்பதற்கும் தேவையான ஒத்துழைப்பைக் குழு வழங்கவுள்ளது” என்று மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருக்கிறார்.

நாட்டின்வருமானத்தை உறுதிப்படுத்தும்பொறுப்பில் உள்ள அதிகார்கள், நிர்வாகத்துறையினர் எவ்வளவு அசமந்தமாகச்செயற்பட்டிருக்கிறார்கள், செயற்றிறன் இன்றி இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இதுவொரு சிறந்த உதாரணம். நாடு இன்று இந்த நிலையை அடைவதற்கும் கடன் வாங்கியே எல்லாவற்றையும் செயற்படுத்துவதற்கும் இத்தகையநிர்வாகத்துறையும் மிக முக்கிய காரணம்.

ஆட்சியாளர்கள் வருமானத்தைப் பெருக்கும் வழிகள் எத்தனையை ஏற்படுத்தினாலும் அவற்றை முறையாக நடைமுறைப்படுத்தவில்லையாயின் அதனால் எதிர்பார்க்கப்படும் முழுப் பயனும் கிடைக்கப்போவதில்லை. அதிகாரிகளின் செயற்றின் இன்மை காரணமாக அல்லது அசமந்தம் காரணமாகவே இது நடக்கின்றது. அரச நிர்வாகத்துறை முழுவதும் இத்தகைய நிலை புற்றுநோயாகப் படந்துள்ளது.

இதனை நிர்வகித்துச் சீர்ப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் நாடு உருப்படப்போவதில்லை. முதலில் இந்தக் குறையை நீக்குவதற்கு ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவேண்டும். இல்லையேல் ஓட்டைப் பாத்திரத்தில் தண்ணீர் பிடித்த கதையாகத்தான் இருக்கும்.

# ஆசிய அபிவிருத்தி வங்கியினரோடு தேசிய நீர் வழங்கல் அமைச்சர் பேச்சு




ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகளுக்கிடையிலான விசேட கலந்துரையாடமொன்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் கொழும்பில் உள்ள நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது.

நீர்வளத்துறையில்மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைக்கான ஒப்பந்தங்களை இறுதிப்படுத்தும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

மூன்று ஆண்டு கால சீர்திருத்த திட்டத்தில் ஒருமித்த கருத்தை அடைவதே கூட்டத்தின் நோக்கமாகும்.

சீர்திருத்தவேலைத்திட்டம்இலங்கையின் நீர்த்துறையில் உள்ள பல அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த மாற்றியமைக்கும் முன்முயற்சி கணிசமான ஆதரவைப் பெற்றுள்ளது,

இது சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை வலுப்படுத்த பட்ஜெட் ஆதரவு உதவியாக 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சந்திப்பு சாதகமான முடிந்துள்ளது. இது ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளை இறுதி செய்வதற்கு வழி வகுத்தது.

இந்த சந்திப்பின் போது அமைச்சர் ஜீவன் தொண்டமான், மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை நிறைவு செய்வதற்கான தெளிவான வழிகாட்டுதல்களையும் காலக்கெடுவையும் வழங்கினார். (05)

# மனிதநேய செயற்பாட்டாளர் டேவிட் நல்லரத்தினத்துக்கு பக்ரைய்ன் நாட்டு அரசாங்கத்தால் மகத்தான கௌரவம்!

ஸ்கொட்லாந்தை தலைமையகமாக கொண்டு உலகளாவிய ரீதியில் மனித நேய பணிகளை முன்னின்று மேற்கொண்டு வருகின்ற Cross Ethnic Community சர்வதேச மனித நேய தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் டேவிட் நல்லரத்தினத்துக்கு பஹ்ரைய்ன் நாட்டு அரசாங்கத்தால் கடந்த நாட்களில் மகத்தான வரவேற்பு மற்றும் கௌரவம் வழங்கப்பட்டது.

பஹ்ரைய்ன் நாட்டு பிரதமரின் அழைப்பை ஏற்று Cross Ethnic Community இன் பேராளர்கள் குழு அந்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டது. இதில் டேவிட் நல்லரத்தினத்தின் பாரியார், Cross Ethnic Community இன் ஆபிரிக்காவுக்கான இணைப்பாளர் ஆகியோரும் பங்கேற்றனர்.

Cross Ethnic Community இன் பிரதான இலட்சியப் பணி இனங்களை இணைப்பது ஆகும். ஸ்கொட்லாந்தில் 15 ஆபிரிக்கர்கள் மற்றும் ஆசியர் குழுக்களை இணைத்து வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றனர். இலங்கையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை இணைத்து வேலைதிட்டங்களை முன்னெடுக்கின்றனர். காரைதீவை சேர்ந்த மீனவ உறவுகளின் பாவனைக்காக பயன்பாட்டுக்கு உகந்த இரு தோணிகளை வலைகள் அடங்கலாக மூன்று மாதங்களுக்கு முன்னர் Cross Ethnic Community வழங்கி வைத்தது குறிப்பிடத்தக்கது.

டேவிட் நல்லரத்தினத்தின் தந்தை கலாபூசன் புல்லுமலை நல்லரத்தினம் பாடசாலை அதிபராகவும், , சிற்பாச்சாரியாராகவும் விளங்கியவர். சுவாமி விபுலானந்தரை திருவுருவச் சிலையாக வடித்து 1967 ஆம் ஆண்டு காரைதீவு கிராமத்துக்கு வழங்கியிருந்தார். (05)

# வற்றாப்பளை அம்மன் வைகாசி பொங்கல் தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தி

## மாவட்ட செயலாளர் தெரிவிப்பு




(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுசிறப்புமிக்கவற்றாப்பளைகண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உட்சவத்தை முன்னிட்டு பொங்கல் விழா ஏற்பாடு தொடர்பான இரண்டாவது முன்னாயத்த கலந்துரையாடல் கடந்த அவள்ளிக்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் காலை பத்து மணிக்கு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. வற்றாப்பாளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உட்சவம் 22.05.2023 பாக்குத்தெண்டலுடன் ஆரம்பமாகியுள்ள நிலையில் இன்று 29 ஆம் திகதி தீர்த்தமும், ஆனி மாதம் 5 ஆம் திகதி வருடாந்த பொங்கல் உட்சவமும் நடைபெவுள்ளது.

இந்த நிகழ்வின் ஏற்பாடுகள் தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர் மற்றும் ஆலய பெருந்திருவிழாவுக்கு வருடா வருடம் உதவிடும் ஏனைய திணைக்களங்களுக்கிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் ஆலய உட்சவ காலத்துக்குத் தேவையான ஆலய வளாகத்தைசூழவுள்ளவீதிகள்புனரமைப்பு, ஆலய வளாக தூய்மைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களோடு ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்களுக்காக சுகாதாரம், குடிநீர், போக்குவரத்து வசதி மின்சாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அதில் உள்ள முன்னேற்றம் குறைபாடுகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது

இறுதியாக மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோது –

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசி பொங்கல் உட்சவம்தொடர்பானபூர்வாங்கஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் ஆலயத்துக்கு ஐந்து லட்சத்துக்கும்

அதிகமான பத்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பாத்துள்ளதாகவும் அவர்களுக்கான போக்குவரத்து, குடிநீர், மலசலகூட வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (05)

# நற்பிட்டிமுனையில் இரத்ததான முகாம்

( வி.ரி.சகாதேவராஜா)

நற்பிட்டிமுனைஇந்துஇளைஞர் மன்றத்தால் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) சிவசக்தி வித்யாலயத்தில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் உதவியோடு ’உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்’ என்ற திட்டத்தின் கீழ் இந்த இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. நேற்று (ஞாயிற்றுக்கிழமை( காலை 8 மணி முதல் 4 மணி வரை இந்த முகாம் இடம்பெற்றது. இந்து இளைஞர் மன்ற பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் இந்த முகாமில் கலந்து உயிர்காக்கும் உன்னத பணியில் ஈடுபட்டனர். (05)